## ஸ்ரீகாமாட்சி பாபா

ஸ்ரீமதி ஹரிப்ரியா ரங்கராஜன்

**பல ஆன்மீக அன்பர்கள் எங்களிடம் ஸ்ரீகாமாட்சி பாபா என்கிற ஸ்ரீகோவர்த்தன குருஜியின் அருளாடல்களை DMS என்ற டிவைன் மதர் சொசைட்டியில் உள்ள பாபா பக்தர்கள் அறியும் வண்ணம் பிரசுரிக்கும்படி வேண்டினர். அவர்களுக்காக மட்டுமின்றி நமது ஸ்ரீபாபாஜியின் அருளாணைப்படியும், இந்த குறுந்தொடரை ஸ்ரீகாமாட்சி பாபாவின் தங்கையான முனைவர் ஸ்ரீமதி ஹரிப்ரியா ரங்கராஜன் அவர்களின் படைப்பாக இங்கே தொகுத்தளிக்கிறோம்.**

# காத்து ரட்சிக்கும் குருநாதர்!

இன்னொரு சமயம் இரவு 11 மணிக்கு குருஜியின் வீட்டில் டெலிபோன் அடித்தது. காமாட்சி பாபா எழுந்து டெலிபோன் செய்தவரோடு பேசினார். அது ஒரு அம்மாவின் குரல், அவள் பெயர் காமாட்சி. அவள் தன் குழந்தையை அன்று மாலை 6 மணியிலிருந்து தேடி தேடி எங்கேயும் கிடைக்காததால் காமாட்சி பாபாவைப் பற்றி கேள்விப்பட்டு எப்படியாவது தன் குழந்தையின் நிலையைப் பற்றி கேட்டு அழுதார். காமாட்சி பாபா அந்த அம்மாவிடம் அரை மணி நேரம் கழித்து கூப்பிடச் சொன்னார்.

பின் அத்தனை நேரத்திலும் மந்திரம் ஜபித்துக் கொண்ட (சில மந்திர பிரார்த்தனையை ஜலத்தில் மூழ்கியவாறே கூறுவது) தண்ணீரில் தன்னை மந்திர charge செய்துகொண்டார் போலும். அந்த அம்மா குருஜியை(காமாட்சி கோவர்தன் பாபாவை



குருஜி என்று கூப்பிடுவார்கள்) கூப்பிட்டபோது அவர் அந்த அம்மாவுக்கு தெம்பு வரும்படி அந்த குழந்தை பத்திரமாக இருக்கிறது என்றும், மேலும் அந்த நாள் மாலை என்ன நேர்ந்தது என்பதையும் கூறினார்.

அதன்படி அந்த பெண் குழந்தையை அழைத்துப் போக வரும் நபர் ஒருவரையும் காணாததால், அவளின் வகுப்பு சிநேகிதியின் தந்தை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அப்போது அவர் தன் இருப்பிடத்தின் விலாசம், குழந்தை தன்னோடு அழைத்து சென்றுள்ளதையும் பள்ளியில் கூறி விட்டு சென்றுள்ளார். ஆனால் அந்த குழந்தையை அழைத்து செல்லும் நபர் ரொம்பவும் நேரமாக வந்ததால் அந்த விவரம் அவருக்குக் கிடைக்கவில்லை.

காமாட்சி பாபா அந்த பெற்றோர்களை மிகவும் ஆசுவாசப்படுத்தி மறுநாள் காலை குழந்தை பள்ளிக்கு வந்து சேருவாள் என்று கூறினார். மறுநாள் பெற்றோர்கள் பள்ளிக்குச் சென்று குழந்தையைப் பார்த்ததும் பரவசமடைந்தனர். அந்தக் குழந்தை அவள் பெற்றோரிடத்தில் காமாட்சி பாபா கூறிய முழு விவரத்தையே கூறினாள். அவர் ஒரு சத்குரு. அவருக்கு யாராவது கஷ்டப்பட்டு அழுது தன்னை நாடினால்

ஒரு போதும் முடியாது என்ற கூறவே மாட்டார். அவர் செய்த பல பல Miracles எடுத்துக் கூற ஒரு புத்தகமே வேண்டும்.

இன்னொரு சமயம் 1990ல் நவம்பரில் 4 வயது பையனோடு தாய் தந்தையர் குருஜியிடம் வந்தார்கள். டாக்டர் அந்த பையனுக்கு Inguinal hernia மூனு அங்குலம் வளர்ந்துள்ளது. ஆதலால் ஆபரேஷன் செய்தாக வேண்டும் என்ற கூறி விட்டார். பிறகு டிசம்பர் 2ந் தேதி 1990ல் குருஜி யிடம் தன் துக்கத்தைக் கூறி அழுதனர். காமாட்சி பாபா தியானம் செய்துவிட்டு பெற்றோர்களிடம், அந்த 4 வயது பையனை, மார்ச் 18, 1991 வரை எந்த டாக்டரிடமும் அழைத்துப் போக வேண்டாம், ஆபரேஷன் செய்ய வேண்டாம் என்றும் கூறினார்.

ஆனால் அவர்களை பரீட்சைஷ செய்வதுபோல ஜனவரியில் தாங்க முடியாத கஷ்டத்துக்கு அந்த பையன் தவித்தான். அவர்கள் சொந்தக்காரர்கள் வெகுவாக இகழ்ந்து பேசினார்கள். ஆனால் பெற்றோர்கள் ஒன்றும் செய்யவில்லை. குருவிடம் ஒரு தலை நம்பிக்கையோடு காத்திருந்தார்கள்.


என்ன அதிசயம்! மார்ச் மாத (1991) முதல் கொண்டு அந்த பையனிடம் நல்ல மாற்றம் முன்னேற்றம் ஏற்பட்டது. குருஜி சொன்னது போல மார்ச் 18க்கு பிறகு உடனே குழந்தை நல மருத்துவர் டாக்டர் ராமமூர்த்தி அவரிடம் அழைத்துக் கொண்டு காண்பித்தார்கள்.

முதலில் டாக்டர் அவர்களை கால தாமதமாக பையனை அழைத்து வந்ததைக் கண்டித்துக் கூறி, பிறகு ஆபரேஷனுக்கு நாள் குறித்துவிட்டு பையனை சோதனை செய்ய ஆரம்பித்தார்.

அவருக்கோ ஆச்சர்யம் தாங்கவே இல்லை. பெற்றோரிடம் ஹெர்னியா எப்படி முழுதும் மறைந்து விட்டது. இப்படிப்பட்ட Inguinal hernia வை ஆபரேஷன் மூலம்தான் சரி செய்ய முடியும் என்று கூறினார். இதுதான் அந்த மகானின் கருணை. அந்தப் பையனை சரிசெய்துவிட்டது இன்றைக்கும் மெடிக்கல் சயின்ஸ்க்கு இது ஒரு புரியாத புதிர். இன்றைக்கும் இந்த பையன் மிகவும் நன்றாக, அவ்வப்போது செக்-அப் செய்து கொண்டு நன்றாக இருக்கிறான். இந்த சம்பவம் நமக்கு உணர்த்துகிறது. Uncompromised faith in Satguru is very essential for a devotee.

தேதி 15, செப்டம்பர் 1988 அன்று குருஜி தன் பக்தர்களை அழைத்துக் கொண்டு கும்பகோணத் திற்கு அருகே உள்ள கோவிந்தபுரம் சென்றார். அங்குதான் ஸ்வாமி போதேந்த்ர மஹானின் சமாதி உள்ளது. அங்கு சமாதியை நோக்கியவாறு உட்கார்ந்து கொண்டார். அதிசயமாக அந்த சமயம்

**பெரிய காற்று வந்து அதை அசைத்துவிட்டது போன்ற அசைவு போதேந்தராள் குருஜியின் உடலில் புகுந்தார் என்பதை உறுதி செய்தது....**



ஒரு ஆபிஸர் கூட இல்லை. அப்போது காமாட்சி பாபா அரை நிமிடம் கண்மூடி பிரார்த்தனை செய்தவாறே தன் இரு கைகளையும் மடி மீது வைத்துக் கொண்டார்.

அங்கு உட்கார்ந்திருந்த அவருடைய பக்தர் களுக்கு, குருஜி trance ல் போவது தெரிந்தது. அவருடைய முகமே மாறிவிட்டது. அவருடைய தாடைகள் ஒட்டிப் போயின. அவர் முகத்தில் சுருக்கங்கள், கோடுகள், தொங்கின சதைகள் தெரிந்து அவரே கிழவராகவும் எலும்பும் தோலும் கொண்டவர் முகம் போல ஆகிவிட்டது. பிறகு ராம நாமம் அவரிடம் கேட்டது. அவர் ராம் ராம் என்ற கூறுகிற சத்தம் கேட்டது. ஆனால் அவர் உதடு ஒவ்வொரு தடவையும் ராம் என்று கூறும்போது மெல்ல அசைவது தெரிந்தது.

பின்னர் ஒரு நிமிடத்தில் ராம ஜபம் நின்றுவிட்டது. அங்கு போடப்பட்டிருந்த சமாதிக்கு மேலே இருந்த தார்ப்பாயின் அசைவு, பின்னர் அவர் சமாதியைச் சுற்றி இருந்த துளசிச் செடியில் ஒரு தெளிந்த அசைவு, எப்படி என்றால் பெரிய காற்று வந்து அதை அசைத்துவிட்டது போன்ற அசைவு ஆகியவை போதேந்தராள் குருஜியின் உடலில் புகுந்தார் என்பதை உறுதி செய்தது.

பிறகு காமாட்சி பாபாவும் மறுபடியும் trance ல் திரும்பி வந்து விட்டதற்கான அடையாளமாக கை கால்களை அசைத்து கண்களைத் திறந்து தன் பக்தர்களைப் பார்த்தார். பிறகு எழுந்திருந்து எல் லோரையும் குரு ஸ்லோகம் சொல்லச் சொன்னார். என்னே! இந்த பக்தர்களின் பாக்கியம்! குருவின்

மஹிமையை உணர குருவின் அருளாசி வேண்டும்.

பிறகு காமாட்சி பாபா கூறினார். "அந்த சமாதியில் ஸ்வாமி போதேந்த்ராள் சக்தி இன்னும் அதிவேகத்தில் இயங்கி உள்ளது. ஸ்வாமி போதேந்த்ரா ஒரு பெரிய ராம பக்தர். அவர் ராம நாம ஜபித்தலிலேயே தன்னை மூழ்கடித்துக் கொண்டார்.

பிறகு அவர் சித்தியான பிறகும் அவருடைய அந்த ஸ்ரீ ராம பக்தியின் வேகம் இன்றும் "ராம் ராம்" என்று உச்சரித்துக் கொண்டே இருக்கிறது. நான் அந்த வேகத்தை என் உடம்பில் வந்து இயங்க சௌகரியப்படுத்தி கொடுக்க அதுவும் என்னிடம் வந்தடைந்தது. அது ஒரு நிமிஷம்தான். அந்த சமயம் நாம் எல்லோரும் சமாதி அருகிலேயே உட்கார்ந்து இருந்தோம். நீங்கள் எல்லாரும் என் முகம் சாயல் மாறுவதையும், ராம் ராம் என்று உச்சரிப்பதையும் பார்த்தீர்கள். இது ஸ்ரீபோதேந்த்ராவின் பக்தி வேகம்தான் என் உடல் மூலமாக குரல் மூலமாக ராம் ராம் என்று ஜபித்தது. எப்பொழுது அந்த பக்திவேகம் (force) என் உடலிலிருந்து நகர்ந்துவிட்டதோ அப்போதே ராம் ராம் என்று உச்சரிப்பதும் நின்று விட்டது. அப்போதுதான் அவர் சமாதியின் மீது போடப் பட்டிருந்த தார்பாலினும் அசைந்தது. ஏனெனில் போதேந்த்ர ஸ்வாமிகளின் force திரும்பித் தன் இருப்பிடத்துக்கு போய்விட்டது என்று தெரிவதற்காக.

காமாட்சி பாபா மேலும் கூறினார்: ஸ்ரீபோதேந்த்ர ஸ்வாமிகள் பெரிய ஞானி. அவர் ஸ்ரீமடத்துக்கு Pontiff பீடாதிபதியாக இருந்தார். ஸ்ரீமடம் அப்போது கும்பகோணத்தில் இருந்தது. ஒருமுறை காமாட்சி கோவர்தன் பாபா என்னிடம் சொன்னார்: "நீ என்னை குருவாகப் பார்த்தால் நான் உன்னுடைய குருவாக இருப்பேன். நீ என்னை அண்ணனாகப் பார்த்தால் நான் உன்னுடைய அண்ணனாகவே இருப்பேன்."

இந்த அற்புதமான வாக்கியத்தின் உள் இரகசியத்தை இப்போதுதான் புரிந்து கொண்டேன். நாம் குருவை தியானத்தால் அவர் நம்மை சம்சார கடலிலிருந்து அப்பாற்பட்ட பக்தி சாம்ராஜ்யத்துக்கு அழைத்து சென்று விடுவார். அண்ணனாக நினைத்தால் சம்சார கடலிலேயே மூழ்கி மூழ்கி கர்மவினையை ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படும். அவரும் அண்ணா என்ற முறையில் உதவி செய்வார். ஆனால் அது நம்முடைய ஆத்மாவுக்கு எந்தவித பிரயோஜனமும் ஏற்படுத்தாது.

- தொடரும்

# உதவி செய்யுங்கள்...



உடலில் ஒரு குறையும் இல்லாவிட்டாலும், என்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று பொழுது போக்கும் பல மக்களின் நடுவில் மாற்றுத் திறனாளி யான நிலையிலும், மாற்றுத் திறனாளிகளுக்காக அரும் பெரும் தொண்டினைச் செய்து வருகிறார்கள் திரு. ராமகிருஷ்ணனும், திரு. சங்கரராமனும்.

இருவரின் கடும் உழைப்பால் 1981-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆய்குடி எனும் கிராமத்தில் **அமர் சேவா சங்கம்** என்ற நிறுவனத்தைத் தொடங்கி கடந்த 32 ஆண்டுகளாக தொண்டு புரிந்து வருகிறார்கள்.

இங்கு மூளை வளர்ச்சி, உடல் கோளாறுகளை சின்ன குழந்தைப் பருவத்திலேயே கண்டுபிடிக்க மருத்துவ வசதியும், அக்குழந்தைகளுக்காக காப்பகமும் செயல்பட்டு வருகிறது. மாற்றுதிறனாளி களுக்காக, ஆரம்ப கல்வியிலிருந்து பட்டப் படிப்பு வரை படிப்பதற்கும், தொழில் கல்வி பயிற்சிக்கும் வசதிகள் உள்ளன. இங்கு படித்த பல மாணவ மாணவியர்கள் வெளி ஊர்களில் நல்ல வேலையில் உள்ளார்கள் என்பதனை அறியும்போது, நம் நெஞ்சங்கள் பூரிக்கின்றன.

நம்பிக்கை அற்ற வறுமைகோட்டுக்குக் கீழ் உள்ள பல மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றும் இராமகிருஷ்ணனும், சங்கரராமனும் கலங் கரை விளக்குகள். இங்கு படிக்கும் குழந்தைகளின் உடலிலும், உள்ளத்திலும் , தன்னம்பிக்கையை ஊட்டி, அவர்களை திறனாளிகளாக செதுக்கும் சமுதாய சிற்பிகள். இம் மாமனிதர்களை எவ்வளவு பாராட்டி னாலும் தகும்.

நாமும் நன்கொடை, உபகாரம் போன்றவறை செய்ய கீழ்கண்ட முகவரியை அணுகுவோம்.

**அமர் சேவா சங்கம்**

எண் : 7- 4 -104a, ஆய்குடி,

திருநெல்வேலி, பின்கோடு : 627852. தமிழ்நாடு.

தொலைபேசி : 91 - 4633 - 261160

Email : mail@amarseva.org